திவிஸவாட்சி

தி. லக்ஷ்மணபிள்ளையால்

இயற்றப்பட்டது.

திருவனந்தபுரம்:

ஸம்ஸ்கிருத பாஸ்கர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1904.

[Copyright Registered]

जाग्रत्स्वप्नसुषुप्तिषु स्फुटतरा या संविदुज्जृम्भते
या ब्रह्मादिपिपीलिकान्ततनुषु प्रोता जगत्साक्षिणी ।
सैवाहं न च दृश्यवस्त्विति दृढप्रज्ञापि यस्यास्ति चेत्
चण्डालोऽस्तु स तु द्विजोऽस्तु गुरुरित्येषा मनीषा मम ॥

—ஸ்ரீ-சங்கராசாரியர்.

யாவையும் எவருந் தானாய், அவரவர் சமயந்தோறும்
தோய்விலன் புலனைந்துக்கும் சொலப்படான், உணர்வில்மூர்த்தி;
ஆவிசே ருயிரினுள்ளா லாதுமோர் பற்றிலாத
பாவனையதனைக்கூடி லவனையுங் கூடலாமே.

—நம்மாழ்வார்

சங்கநிதி பதுமநிதி இரண்டுந்தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்,
மங்குவா ரவர்செல்வ மதிப்போமல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லராகில்;
அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்,
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்,
அவர்கண்டீர் நாம்வணங்குங் கடவுளாரே.

—திருநாவுக்கரசு.

INTRODUCTION.

There are moments in a man's life in which he is led to ask himself various questions respecting the problems of his existence, his relation to God, to man and even to every living creature in the world. These stand out from the rest, as the most serious moments of his life. So long as such questionings are not laid to rest, in some sort, they are likely to haunt him again and again, when his attention is turned to the graver aspects of life. If answered to his satisfaction, they cease to haunt him; if the answers could be reasonably related to the plan and order of the universe, the good and grand principles on which its eternal government is founded, the deepest, most lasting and living happiness is the outcome of those questionings. There is no doubt, however, that with the knowledge or information at his command, or by dint of his own power of introspection, an attempt is generally made to answer such questions by the man who sincerely desires to solve them for the peace of his mind. A desire on the part of such a man, to record the answers found, would be most natural, provided they have satisfied him.

If a man should apply to me for concise information regarding my settled convictions on such subjects as are treated of in the present work, the answer would, in all likelihood, take the shape of the information contained in these verses. Since these questionings have been engaging me for some years past, I have deemed it a duty to record my answers, and, latterly, have thought it expedient to present them to the world, whatever may be

their intrinsic value. I have thought that, all things considered, it is better that I publish them to the world than that they be buried within me. In arriving at such a conclusion, the following considerations weighed with me.

Feeling is the factor which, in the generality of cases, first determines the actions of men; thought and convictions come next, and only in the case of the thinking few. Noble actions will follow noble thoughts, provided they are not hindered by the influence of adverse feelings, prejudices or caprices. It is therefore important that noble thoughts should be directly connected with noble and happy feelings in the closest possible tie and with the greatest possible strength. Great care and circumspection is necessary to avoid errors of thought and the perilous quagmires of prejudices and superstitions. If a connection is once and strongly discerned and established between the good and great laws governing the universe and whatever is worthiest in man, it can be imagined what a harbour of rest the anxious, care-tossed soul of man will find.

In an age of transition, such as the present, the importance of having settled convictions on such subjects as are treated of in this little work, can hardly be overrated. Many of the ideas instilled into our minds by our fathers, concerning the cosmogony of the world &c, are being swept away and we are obliged to sit questioning on the rationale of every cherished belief and witnessing the flight of those that can not stand the light. Western science, while it has swept away most of our fond notions, does not care to replace them by any doctrines on the grand problems of existence. No boundaries seem

to be set on the powers of man, and apparently, the connection of those powers with the divine is either not traced, or the tracing is considered not possible, and therefore not necessary. But western science, with all its light, does not serve to lift us out of the sad reality of our sufferings and the dejection and despair, the throes and pangs, of our most serious moments of spiritual questionings. We long for answers and convictions on which in such moments we can rely, and which, at the same time, would stand the test of our reason and not carry us away to the realms of mysticism or superstition. If such answers and convictions are not furnished, men's minds are certain to be staggered and thrown out of balance, every time that things may happen contrary to their beliefs and expectations, or to the prophecies of science. Mysticism, speculation, or superstition is the region to which the mind would naturally run in this state of perplexity. Those regions do not furnish firm ground to tread upon to those who require proofs at every step. Certain minds in a state of spiritual despair are apt to look upon what is not true as truth, and to take as matters of faith, things which are not proved. The freehold of reason and thought is abandoned, and the pendulum might oscillate even to the side of unreasonable superstition, as the only open door of refuge. No confidence is placed upon the possible achievements of one's own power of introspection, and the results of any such introspection are either scoffed at as baseless and futile, or as not having the sanction of religion. A simple, grand and clear worship of God through nature or His manifasted works is derided or discouraged. Thinking for one's self is counted almost a sin.

A diffidence in the power of human thought is generated by an abject and unquestioning subjection to custom and a self-sacrificing reverence to all that is past. While reverence is an ennobling quality and a blessing, contempt for the golden present is an unmistakeable sign of slavery in thought. It rarely enters the minds of those who hold that all that is worth knowing has been already thought out for us in the past, that the past workers, whom we adore, were themselves human beings, and that their conclusions were arrived at by processes which are not very dissimilar to our own, and which, at any rate, it is not irreligious or impossible for other men to follow by vigilant introspection and development of their faculties. To admire the glory of God—which is true worship—nothing more than a faithful and intelligent observation of His works is absolutely necessary, which the weakest is not incapable of doing, if he can honestly apply himself to it. By a close observation of nature, nothing but good can result to the true and ardent spirit. A reliance in ourselves and in the power of thought that God has given us would not bespeak a sacrilegious spirit, but rather true reverence. At most, we need only hints and suggestions to set us to observe correctly and think rightly, and if we have circumspection enough, we may avoid desperate conclusions and pitfalls, leaving the soul free to worship, wholly and truly, God who is enshrined in His own works. The principles which an observation and study of nature can lead us to detect are all wholesome guides for us, and the happiness of millions could be attained by following them in their true spirit. No psychic development or *yogam* is necessary to find out those principles or for their practical realization; and if we are to

measure a man by the extent of the good he can confer on the world, a plain worshipper, of the stamp described, may prove himself more useful to the world than the *yogi*,‡ and thus better fulfil the purposes of God in his creation.

I shall take an instance. To discern, even intellectually, that deep below the differences of caste and all conventions and ceremonies of rank, there is a unity, a brotherhood among men, nay, among all living creatures, is, in my humble opinion, as necessary for the peace and progress of the world as the study of geometry, physics, or astronomy. The effect of such discernment, as a moulding factor in the nature of man, is direct and wide-reaching. No other consideration can tend so directly to generate genuine fellow feeling, sympathy and unification in spirit of the different sections of the community. These feelings can continue to exist, despite the truths unearthed by the mole of archæology or the eagle of human power and ambition. In such a country as India, the necessity for the promotion of such feelings cannot be sufficiently emphasized.

To those who are likely to observe that the condition of thought in relation to which such feelings arise is too *philosophical* to be of *practical* benefit, I would respectfully point out that *philosophy* is nothing more than the discovery and expression of the highest truths, and it is only those who *think* high, that can feel high and act high. It is only a knowledge of high truths that can be of help to stem the masses clear of shoals and quicksands. The nature and stock of a man's convictions and knowledge of the truth will be the test of the nature and course of his actions, and the extent of the good he can confer on the world. They are, in fact, his mental possessions. Re-

‡ No reflection is here intended against the *Yogi* who can prove himself useful to the world.

medies or contrivances other than those based upon a conviction of the fundamental truths will be futile in bridging over the differences that exist between various classes, for they can but play about the surface of things. It is only an inculcation of the highest truths that can strike at the root of social evils. The underlying unity among souls—this is the grand lesson which every sacred book and all philosophy is intended to teach and which the custodians of such books *ought to* teach, and not ideas tending towards mutual conflict between classes or the promotion of racial disintegration. Nothing can be more important to the world than the production of *sympathy*, not only between man and man, but also between classes, between the high and the low, the cultured and the ignorant. And what agency can more effectually bring it about than the discernment and recognition that we are all essentially of one origin, similarly constituted by nature, despite differences of color, caste and contour? This most essential consideration is generally consigned to oblivion, and prominence is given to conventional, evanescent, and non-essential differences which have no direct or necessary connection with our inward nature, with the result that our quarrels and animosities never end, our sympathetic actions never begin, and are never carried through in earnest, even when begun. Even with the advance of education, not much improvement is seen in this direction. Why is not the cause of this indifference removed? The fact is, that the natural indolence of man has prevailed also in the region of thought, preventing him from perceiving deep identities and thus acting up to them. It is so *easy to think near the surface of things*, so hard to go depths, and this *ease* is accountable for the upkeep of racial differences.

It is, therefore, I conceive, one of the highest duties of man and especially of the educated, to endeavour to perceive and inculcate, as far as it lies in their power, this truth of the essential unity among men. It is not the dream of a visionary. It is a simple, yet grand truth, which can work wonders in the minds of men, provided it is grasped, and in the right spirit.

I hope I have made it clear that the popular notion that such truths have no practical utility is erroneous, and that it is unjust to set them aside as too philosophical, as if the truths of philosophy are intended for angels and not for men, and as if our conventional notions (convenient lies and errors of thought in the masque of truths, which lull our sympathies to everlasting rest) should follow us even through our ashes into the other world. Similar remarks would apply to certain other truths, which it would be out of place to dilate upon here, and which are in perpetual danger of being thrown overboard as too philosophical and nothing practical. Nothing can describe the littleness and narrowness into which our minds have been habitually scooped, as the meaning and scope of this sceptic of a word, *practical*. This shrewd-looking word is applied to most things which are *easily managed* and to whatever humours the laziness of man in thinking, feeling and acting; and any attempt to widen the scope of man's heart is dubbed 'philosophy' and dismissed without a trial. The word *policy* is another voracious demon of the same species. It devours most of our principles, as the other most of our sympathies, nay, what is more, our sincerity; and both must have worked a world of mischief in the past. All sorts of false and petty notions are sometimes set on foot, bred and maintained by the so-called *practical* man.

I trust that this attempt to familiarize certain thoughts, however feebly made, will not be unwelcome to those who see their direct bearings on the feelings and actions of men. To the man who thinks, it may be hoped, this field of work would not be less important than the digging of mines or the development of a country's resources. If any of the truths here attempted to be expressed happen to coincide with those unravelled by others, or with what is already known, even an iteration of such by me, I hope, would not make them stale. Truths are "joys for ever" and can never be insipid to those who think in earnest. It is apt to be forgotten that thoughts are, in themselves, invaluable. Sometimes one good thought or feeling may save many a battle. And much hatred and heartrending could be spared to the world by the spread of thoughts and sentiments calculated to promote sympathy towards man and reverence towards God. The influence of such thoughts and sentiments is not less direct, or practical upon the human mind, than that of tonics upon the human body. Viewed in this light, I hope, no great apology would be needed from me for thrusting this humble venture upon the attention of the world.

I have nothing to add respecting the concluding verses of prayer, except that I believe that prayer is the natural outcome of all serious meditations, and that, under any circumstances, there cannot be too much of the same.

July 1904.
TRIVANDRUM. T. L.

திவினவாட்சி.

—o—

(அருளையெல்லாம்)

ஒன்றென்றறி, பலவென்றறி, காணு முலகமெல்லாம்
சென்றென்று மொன்றென்றறி, அருளை: அதுசேர்ப்பதெல்லாம்
நன்றென்றறி: ஒன்றும் நன்றுமல்லாற் பின் நவிலுவதற்
கின்றென்றறி; அவ்விரண்டுமொன்றே, அருளென்பதுவே.

(சமயவொற்றுமை)

எண்ணுற்ற நால்வர் ஒருமலை காணுதற் கேறிடவே,
திண்ணுற்ற பாதையொருவன், மரத்தின் சிரமொருவன்,
தண்ணுற்ற ஓடையொருவன், பறவை தனித்தொருவன்
கண்ணுற்றபோல், பல்சமயத்தர் காண்பர் கடவுளையே.

சமயமெல்லாம் அடிக்கீட்டில் ஒன்றே; அது சத்தியமே,
அமைவதெல்லாம் ஒருசக்தியென்றும், ஒன்றகிலமென்றும்:
உமையொருபாகனுங் கண்ணனும் வேறலர்: ஓர்பொருளே,
தமதென, வேறு மனங்களில் வேறெழும் சாயைகளே.

கோவில்மட்டோ குடிகொண்டது தெய்வம்? கொடிசெடியிற்,
பூவிலுண்டே, அகப்பூவிலுண்டே, வன் பொருப்பிலுண்டே,
காவிலுண்டே, பைங்கிளிகளின் பாட்டிற் கலந்ததுண்டே,
நாவிலுண்டே, செப்பும் பாவிலுண்டே, மெய்ந் நவில்பொருளே.

(பதியின் மாட்சி)

தள்ளுண்ட புல்லினும் தண்ணருள் நாட்டிய தத்துவத்தை
உள்ளுண், டதிசயம்ஊறிப், பெருங்களிப் பொங்குவதால்
கள்ளுண்ட வன்கிறுக்காயின், கருத் தென்கதிபடும்,மற்
றெள்ளுண்ட எண்ணெயின்எங்குநின்றான் செய்ததெண்ணிடினே?

சோலையைப்பார், பகற்சோதியைப்பார், அகச்சோதியைப்பார்,
காலையைப்பார், அண்டமாலையைப்பார், புவிகாப்புடைய
வேலையைப்பார், அருள்வேலையில் வேறெதுவேனும் ஒரு
மூலையைப்பார், நின்சிறுமையும்பார், பக்தி மூண்டெழுமே.

கானகத்தே கண்டகாட்சிகள் ஆங்கருள் காட் டியதே;
வானகத்தே மிளிர்மாட்சிகள் ஆங்கருள் மாட டியதே;
ஊனகத்தே கொண்ட ஊக்கங்கள் ஆங்கருள் ஊட் டியதே;
நானகத்தே நின்றதோற்றமும ஆங்கருள் நாட்டியமே.

கதிர்தரும் ஞாயிற்றின் காந்தியும். ஈசன் கலையிலெழும்;
முதிர்தரும் உள்ளொளி பேசாதமோனத்தின் மூண்டவொளி;
அதிர்தரும் அச்சஇடியொலி, அம்புள் அசைக்குமொலி,
எதிர்தரும் நாதமெல்லாம் அண்டநாதத் தெழுந்தனவே:

ஞானந் தெளிகின்ற போதும், மகானந்தம் நம்மிலெழக்
கானந் தெளிகின்ற போதும், பெருந்தன்மை, கறபு, மெய்ம்மை,
தானம், தவம், உயர்வீரம் விளங்குந் தனிப்பொழுதும்,
வானந் திறந்ததுபோற் காணும் முன்னவன் மாட்சிமையே.

வல்லாரியற்றிய மாவேலையுள்ளும், மனமறிந்து
நில்லாநிலை யொன்றுளதே; அந்நன்னிலை நேரப்பெற்றார்,
சொல்லாத சொல்லும், சுகியாச் சுகமும் துலங்கவைப்பார்,
எல்லாக்கலையிலும் எம்பெருமான் நின்ற எண்ணிலையே. 10

எங்கும் பரம்பொரு ளாகுமென்றால், அஃதிருக்குமிடம்
தங்கும் சதானந்தமென்றால், அவ்வானந்தத் தண்ணமுதே
பொங்குங் கடலெனப் போமாறெலாமுண்டு; பூக்கடற்குக்
கங்குங்கரையு முண் டக்கடலுக்கவை காண்பரிதே.

முற்றாப் பெருங்கடல, மோதாப பெருங்கடல், மொய்யனல்போல்
சுற்றாது சுற்றும பெருங்கடல், ஸ்தூலமும் சூக்ஷ்மமும்
பற்றாதுபற்றும பெருங்கடல், சீவர்கள்பாற் கருணை
வற்றாப்பெருங்கடல், மாண்பெனுந் தேன்கொண்ட வான்கடலே.

அகத்தே நெகிழ்வும, புறத்தே இறுக்கமு மாம்புவிபோல்,
ஜகத்தே பரம்பொருள் ஆத்மாஜடம் தானென நின்றதே:
முகத்தே புவிப்பொருள் பல்பொருளாய் உருமுண்டதுபோல்,
மகத்தாம் பரம்பொருள் பல்லுயிராய் உருமாறியதே.

விண்ணாரும் அண்டக்குழுவும, அகண்ட வெளியும், இந்த
மண்ணாருயிர்களும், பண்டமும் சூடுமகிமை யென்றன்
கண்ணாரக்கண்டும், கடவுளுண்டென்னக் கரியெதற்கோ?
எண்ணாதகோடியும சொல்லும அவ்வுண்மை எடுத்தெடுத்தே.

மண்ணளித்தான், புல் மரமளித்தான், நம்மனமளித்தான்,
கண்ணளித்தான், கைகளையளித்தான், கண்கள் காணுமொளி
விண்ணளித்தான், விண்ணுமண்ணுங் கொள்கோடி வியப்பளித்தா
தண்ணளிச்சாகரன். எண்ணருங்கோடிக்குந் தந்தையனே. [ன்,

ஒளியாரிடத்தில் மறைவாய், மறைவில் ஒளியினனாய்த்,
தெளியாரிடத்தில் உறவாய்த், தெளிந்தவர் தெள்ளமுதாய்,
அளியாரிடத்தில் அமைகினும தான் அங்கமர்பவனாய்,
எளியார்தமக் கெளியனாய் நின்றான் எம்மிறையவனே.

அறியார்க்கும், மிக்க அறிவார்க்கும் ஈசன் அறிவிக்கின்றான்;
சிறியார்க்கும், சீர்த்த பெரியார்க்கும் நீதி செலுத்துகின்றான்;
வறியார்க்கும், செல்வம் மலிந்தார்க்கும் நேயம் வழங்குகின்றான்;
குறியா தொருவரையேனும் விடான் எண்குணத்தவனே

(படைப்பின்பய னாராய்ச்சி)

படைக்கின்ற தீசன் திருவிளையாட்டுப்; படைத்தவையைத்
துடைக்கின்ற தீசன் விளையாட்டோமாறல்; இத்தொல் வினையால்
கிடைக்கின்ற நன்மை அதுவென்னை யென்பாருளர்; கேளிசெய்து
சடைக்கின்ற காலமுமின்றோ அச்சர்வ தயாபரற்கே?

நன்றே அவ்வீசன் நடத்துவதாகும்: நலனலனாய்
என்றேனு மீசன் இருக்கின், அதீசன் இருப்பலவாம்:
ஒன்றே நம்மீசன் உத்தேசமென்றால், அந்தவொன் று நன்மை
யன்றாயிருப்ப திலையே: அதென்னென் றறைகுவதே?

மற்றவர்க் கொன்றின்றித் தன்னயந்தேடல் மனிதர்க்கல்லால்
முற்றறிவோற் கில்லை: எல்லாவுயிர்க்கும் முளைக்கும் நன்றே,
உற்றறிநன்றில் உயர்ந்தநன்றாம்: அவ்வுயர் நன்றலாற்
சற்றுங் குறைபட எண்ணுவனோ அத்தயாபரனே? 20

எவ்வா ருயிருக்கும் ஒவ்வோர் தொழில்கண்டங் கேற்படுத்திச்,
செவ்வே அதின்செயல் நோக்கினின்றான், பெருஞ்சித்துடையான்:
வெவ்வே றடுக்குத் தொழில்கள் வெவ்வேறு விதங்களும்பி,
ஒவ்வா துபோலிருந் தெல்லார் நலத்திற்கும் ஒவ்விடுமே.

ஒவ்வோர் பொருளினும் ஒவ்வோர் நலத்தை யுதிக்கவிட்டுச்,
செவ்வே யுலகஞ் செழிக்கச் செய்தான், பெருஞ்சித்துடையான்:
அவ்வப்பொருளிலுந் தானிலன்போ லிருந்தாட்டி வைத்துக்,
கவ்வைக் கடலிற் கலவா தகிலங் கலந்தனனே.

எல்லாரும் இன்பம் விரும்பல் இயற்கையின் ஏவலென்றால்,
பொல்லாங் கியற்கைக்கு மாறாட்டம்: அத்துடன் போர்செயலே
நல்லாறு சேர்ந்த இயற்கைத் தலைவன் நடபடியாம்:
வெல்லாது தீங்கதை, நன்றே இறுதியில் வென்றிடுமே.

அழுக்கென்ப, மண்ணுற்று, நாளேறத் தாவர மானவைக்கும்,
புழுக்கட்டும் நல்லுணவாய் உருமாறுதல் போல், மனிதர்
இழுக்கங்கள் தாமும், உலகத்திற் கீசன் இசைக்கும் நன்மை
யொழுக்கினை ஓங்கச்செய் யூற்றாகும், ஈசன் ஒழுங்கு கொண்டே.

எல்லாவுயிரும் சுகம்பெறல் ஈசன் எண்ணும் முடிவாய்ப்,
பல்லாயிரம்வழி அச்சுகம் எய்தப் பயிற்றுகின்றான்:
பொல்லாங்கினோடு பொருதுதற்காகின்ற போர்ப்படைஞர்
அல்லாதவரென்று அவன்படைப்போரில் இங்காருமின்றே.

(அருளாட்சி)

காராளலின்றிப் பயிரில்லை, அப்பயிர் காதலித்துச்
சாராகக் கொண்ட உயிரில்லை, அவ்வுயிர்த் தாகமற
நீராளும் பல்வகை யூற்றுத்தலமில்லை; நேயனருள்
பாராளுமுண்மை, இதாராய்ந்து பார்ப்பவர் பார்ப்பரன்றே.

கணமேனும் நாட்டின் வளநாடியன்றிக் கழியவிடான்:
தணமேவும் வெண்குடைக்கீழ்க் குடிதங்கத், தருமநெறி
பணமேனும், பாடுபதமேனும் பார்ப்பின்றிப், பார்க்குமன்போல்,
குணமே கருதி உலகூந்தினான், எண்குணமன்னனே.

இம்மாநிலத்தில் நடக்கின்ற சக்திகள், எவ்வெவையும்,
எம்மான் படைப்பு: அவைக்கெம்மாற் றரத்தக்க தெள்ளளவும்
கைம்மாறிலை; அதுநாம் மறந்தோம்; நம் கவனமெல்லாம்
சும்மாட்டுக்காரன் மனம்போல், எடுத்ததிற் றாங்கிடுமே.

நெருக்குண்டு, புண்பட், டுழைப்பாற்புழுங்கி, நிலைகுலைய
இருக்கின்ற நாம் நமைப்போல்வார் செயுட்பொருளேறிடவே
கருக்கென்று போவதல்லால், ஈசன் வான்செயல் காணவென்றால்
உருக்கென் றுறைகின்ற பேதைமை நாம் என்றொழிக்கின்றதே ?

நம்மாலெழுந்தது தோட்டமென்பார் வித்து நட்டதல்லால்,
தம்மாற் படைத்த தொன்றில்லை: தண்ணீர்விட் டுத் தம்மனையிற்
சும்மாயிருப்பர்: எழுமு, டிலை, காய், சுவைக்கனிகள்
எம்மான்படைப்பு: அவனின்றெனிற். கையுமெடுப்பதெங்கே? 30

சுயப்படல் நீக்கிக் கவனிக்கின், தோன்றிய தோற்றமெல்லாம்
வியப்பதற்கே வகையாம்: நம்சிறுகுறை வீசிவிட்டால்
நயப்படும் ஈசன் செயலறிவோம்: அதை நம்பிக்கொண்டே,
செயப்படும்வேலை வியப்பெழ வோங்கித் திகழ்வுறுமே.

வேற்றுருக்கொண்டவன், வேறிடத்தான்; உயர் விண்ணகத்தான்,
சோற்றுருக்கொண்ட நமமெய்யிடத் தீசன் தொடக்கமிலான்,
காற்றுருவானவன், என்றிருப்போர் செய்வர் கண்டவெலாம்:
வீற்றிருக்கின்றனன் உள்ளத்தில் என்பவர் மேலவரே.

ஏருண்ட பாரில் எளியாருழைக்க, இருங்கடலின்
நீருண்ட காருண்ட நெல்லுண்டு, நாம உயிர்கொள நின்றோம்:
ஊருண்ட ஊணுக்குக் கைம்மாறுண்டோ? நன்றி பூசிக்க
ஆருண்டு? தின்பதற் கெத்தனைபேருண் டிவ்வண்டத்திலே?

மடங்கியகால் நிமிர்ந் திப்புவி வீழ்ந்திந்த வாழ்வறியத்
தொடங்கிய நாள்முதல், இந்நாள்வரைக்கும், தொட்டுருமுடல்
நுடங்கிவிடா தளித், தேராளமின்பம் நுகரவைத்த [னோ ?
தடங்கலும் ஒண்ணின், அவ்வன்புக் கெம்மாற் செய்யலாவதென்

(பதியின் செயல் வியப்பு)

ஒருநாள் திருச்செயலாராய்ந், தென்னுள்ளம் உருகின்றால்,
திருநாளதாம்: மற்றைநாள் வெறுநாள்: அருள் தேடியநாள்
அருநாள்: அறிந் தவன் தொண்டுசெய் தையன் அருள்கிடைக்க
வருநாள் பொன்னாள்: அதற்கெந்நாளும் ஈடு வருவதின்றே.

செயல்கண்டு கொள்ளின், திருச்செயல் காண்க: நம் சிவன்றரும்
வயல்கொண்ட நெல்முதல், வான்கொண்டமீன்கள்வரைக்கும்,இப்
கயல்கொண்டகண்முதல்ஞானக்கண்வாய்ப்புங்கருதுக:இம் [பால்
மயல்கொண்ட உள்ளக்கருவியும் ஈசன்றன் வான்செயலே.

கண்பார்க்கும் ஈசன்றிறமை பார்க்கவேண்டில், திகழுகின்ற
விண்பார்க்க: மெய்யினை விசித்திரம்பார்க்க: நம்மெய்யொடுங்கும்
மண்பார்க்க: மண்ணின் வளம்பார்க்கப்: பார்க்குமிம் மாண்கருவிக்
கண்பார்க்கப்: பின்கருதிப்பார்க்க செய்த தெக்கையெனவே.

ஒவ்வொரு காட்சியும் நம்மனப் பெட்டியி லோர் படமாம்:
செவ்விய ஞாபகங்களோடி அங்கு திருப்பிவைத்தால்,
அவ்வருங்காட்சியை ஒக்கின்ற பெற்றி அநுபவமாம்:
திவ்வியஞானமு முண்டாகும் ஆய்கின்ற செம்மதிக்கே.

எண்ணம்பிறக்கவும், எண்ணிய செயவதற் கேற்றமனத்
திண்மைபிறக்கவும், செய்வினைமாட்டது சீர்குலையா
வண்ணமிருக்கவும், செய்வாய் தமை யின்றி வாய்த்திடவும்
தண்ணந் திருவருள் வேண்டும், ஒவ்வோர் சிறுதட்டினுமே.

சக்திகளொத்தனையோ சேர்ந்துதாங்கின தானையைப்போல்:
சித்திரமாங் கொலு மூளை: அவ்வான்றுறைச் சேவையிலே
எத்தனையோதுறை: மத்தியில் ஆத்மஇறை மகுடம்
வைத்தது பார்மின்! உடலெனுநாட்டினை மாணுமன்றே! 40

புகந்தாங் கரணங்கள் சிந்திக்கும் மூளைக் கருந்துறைகள்:
மகத்தாம் அறிவுக் கடுத்தவை: ஐந்துவகைப் புலனும்
ஜகத்தர முணர்வைத்தரும் கல்விச்சாலைகள்: சாதகம் பார்
முகத்தே மனிதருக் கென்னுண் டிவ்வான்ற முறையின்றியே?

சிந்தனைச்சாலைக்கு முந்திய மந்திரி யாறிவாம்:
மந்திரச்சாலைக்கு நாணயச் சோரியை வார்த்தடிக்கும்
எந்திரச்சாலை வயிறாம்: விதிக்கின்ற ஏவல்செய்ய
முந்துறுங் கால்கை: உள் நாவெனும்பேரி முழக்கிடுமே.

கரமே திரவியச்சாலை: சிவப்புக் கறுப்புநிறம்,
விரலைத்தொடங்கி உயர் உச்சிகாறும், விரி குழல்வாய்த்
தரமே அதின் தொழில்: சோரியின் மாசுநீத்து, நந்தம்
குரலை ஒலிப்பிக்கும் காற்றாசயமென்னுங் கோட்டைகளே.

சிரம்பால் வனைந்த பெருங்கூடை போல், இந்தப் பீடம்பை
நரம்பரம் உயர்த்தி வைத்து நிரம்பிறது: நாட்டிலெங்கும்
உரம்பாலித் துள்ளுமபுறம்பு முணரும் உணர்வெழுப்பும்:
வரம்பாம் அறிவினுக்கு: இத்துறையின்றி இவ்வாழ்வில்லையே.

துப்புரவாக்கத் துறை யுற்றதே, உடற் றோல்புறத்தும்,
கொப்புறு மாங்கனிஈரல், குழாய்க்குடற் கோட்டத்திலும்,
செப்புறு வாயிலும், கண்ணொடு மூக்குச் செவியிலும்: இவ்
வொப்பரு நாட்டினைப் பின்பற்று நீடின்ப மோங்குவதே.

சோரா துடம்புக் குணவளித்தால், தொழில் செய்யவலி
நேராயிருக்கும்: அதின்றேல், இன்றே: அங்கமின்று தம்முட்
சீராயொழுகின், செயலுளது: அன்றிச் செயலுமில்லை:
நீராவியந்திரம் போலாம் நம்யாக்கை நிலையதுவே.

மன்னோர் சவுக்கியமென்ப துறுப்புகள் வாய்ந்ததொழில்
நன்னாடி யோடு புரிதல்: அந்நாடி நரம்பின்வலி:
என்னை நரம்பின்வலி? ஏறப், பாஸ்காம்: எய்து வினை
தன்னுடைய அப்பொருள் சேர்ந்த செழிப்பின் றரத்ததன்றோ.

(அழகினியல்)

என்னை அழகென்பது? எம்மனம்அத்தைக் கண்டேங்குவதேன்?
முன்னை அழகெம்மகத் திருந்தாலன்றி மோகமுறோம்:
பின்னோர மெம்மைப் பிரிந்ததுபோலும்: பிரிவறியா
தென்னோர மஃதெம்மைச் சேரவன்றோ மனம் ஏங்குவதே?

உருவமன், றுற்றநிறமன், றொளியன், றுடன்கலந்த
பருவமன், றெம்மைக்கவர்ந்தது: உள்ளானந்தப் பக்குவமே:
புருவமும், நெற்றியும், கண்ணும், வடிவமும், பொன்னிறமும்
மருவிய மேன்மைக் குணங்களன்றோ உள்மயக்கியவே?

ஆனந்தம் ஈவ தருங்குணம், அன்பினை: ஆனந்தத்தைத்
தானந்து மேனிக்குறிப்பிடம் நம்முளம் சாட்டுவதால்,
ஈனந்தரு முடல்மேனின்ற தாசை, இனிமையுற்ற
கானந்தரு மரக்கட்டை நம்முள்ளங் கவர்ந்தெனவே.

பேணழ காண்பெண் உருவத்திலாகின்ற பெற்றியொன்றோ?
காணழகா மிவை: காணாவழகு கருதிலுண்டாம்:
நாணழகாம், உண்ணடை யழகாம், சொன்னடை யழகாம்,
மாணழகாம்செயல், வானழகாம் நன்மதியழகே.

(படைப்பிற் குறிப்பறிதல்)

விலக்குதல் வேண்டும் பொருட்களில், ஈசன் வெறுப்புவைத்தான்:
இலகிட நல்லுயிர்பல்க, வனப்பில் இணக்கம்வைத்தான்:
கலக்கமுண்டா மிடங்காட்டித், தற்காப்புக் கருதினைவைத்தான்:
உலகில், இவ்வுண்மை, விலங்கியல் பார்த்தவர் ஓதுவரே.

பாம்பால் உலகத்திற் கென்னலமென்பர் பகுத்தறியார்:
சாம்பாடுறும் பலநோயூட்டுங் காற்றினிற் றாழ்விடத்தைத்
தீம்பாலென உண்டுலகுய்ய வைத்தல் தெரிந்தவர்க்குப்,
பூம்பாரில் வீண்படைப் பில்லை யென்னுண்மை புலப்படுமே.

மெலிவே றிலைப்புழுவின் காப்பதின்னிறம்: மேற்கொண்டெதிர்
வலியேயிலாத் தசைஆமைக்குக் காப்பு வன்றோடு: மறக்
கலியே கொளாத கலைமானைக் காப்பதுகால்: களுழும்
ஒலியே குழவிக்குக் காப்பாம்: இவை அருள்ஓதுமன்றே.

தாவரமோங்கத் தகுநிலமாக்குந் தரைப்புழுக்கள்:
மேவரும் ஆழிக்கரை வளைத் தாய்துறை வேயும் சிறு
சீவர்கள்கோடி: மனிதர்பின் வாழ் பல தீவெழும்பக்
காவரம்பாக்கிக் கடலினைத் தூற்றும் கடற்புழுவே.

எல்லாப் பொருளிலுந் தெய்வீகம் காண்டல் இயல்பறிந்த
நல்லார் அறிவின் பயனும்: அவ்வானலம் நாடுகில்லார்
சொல்லாத சொல்லியும், தோன்றாத தோற்றியும் தூயகலை
கல்லார்தமக்குச் சமமாவர்; நூல்பல கற்றுமென்னே?

(வாழ்க்கை மதிப்பு)

பல்வாழ்க்கை யுள்ளும் இம்மானிட வாழ்க்கை, பகுத்தறிவாற்
செல்வாழ்க்கை யாதலின், நல்வாழ்க்கை யென்பர் சிலர்: நினைப்புச்
சொல்வாழ்க்கை யென்னல் தகுமே: அதுவன்றிச், சோதனைமட்
டில்வாழ்க்கை இங்குநம் மில்வாழ்க்கை: மற்றொடிதுசமமே.

அருமையென்போம் இந்தவாழ்க்கை: மற்றாதல் அருமையன்றோ?
பெருமையென்றோ இதில், நம்மனத்தே அப்பெருமைஇன்றேல்?
பொருமத மொன்றில், புலியனையோம்; உட்பொருத்த மிலோம்;
எருமையின் கூட்டத் தொருமையுண்டே இதற் கெண்மடங்கே.

வாழுமென்பார் மக்கள்வாழ்வினை; மாயையின் வஞ்சவலை
வீழுமென்பார்; உயரானந்தம் விட்டு வினைத்துயரத்
தாழுமென்பார்; கலிசூழுமென்பார்; உள்ளறியின், மிக்க
ஊழுமென்பார்; அன்றி, நல்லதென்பார் இங்கொருவரின்றே.

வானேயுலகம், மதியினொடன்பு வகித்தவர்க்குத்:
தானே அவர்க்குத் தரும் எண்ணிலானந்தம்: தண்மதுரத்
தேனேபெறினும், சுவையறியார்க் கது தித்திக்குமோ?
ஏனோ இயற்கை படியார் உலகை இகழுவதே? 60

களியார் குழந்தைகள், மோசமெண்ணாது, கைக்கத்தி கொண்டால்,
அளியார் அவர் தந்தைதாயர் அதைப்பறித் தாள்வதுபோல்,
ஒளியார் கடவுளும், மானிடர்தங்கட் குறுமிடும்பை
தெளியாது கொள்ளும்பொருள் பறித்தாண் டுய்யச் செய்யுமன்றே.

வருத்தப்படுகின்ற நோயாளிக் கேற்ற மருந்தளிக்க,
மருந்துச்செடியும், வகைதெரிவாரும் வகுத்தவண்மை,
கருத்துப் பொருளினும் கற்றவர் நெஞ்சினும் காணுங்குற்றம்
திருத்தும், செழும்பொருள் செம்பாகச் சொல்லுடன் சேரவைத்தே.

(செயல் தோன்றவிடல்)

எல்லாச் செயலும் இழைத்தான், இழைத்த தெடுத்துரைக்க
இல்லாது, தன்னுருத் தான் மறைத்தான்: அந்நிலைமை கொண்டு
நல்லாறுடைய வல்லார் உலகோங்க நலமியற்றிச்
சொல்லா திருப்பர், அவர்செயலால் அது தோன்றவிட்டே,

(பதியின் ஆற்றல்)

பலக்கப் பலவணிப் போர்வீரர் சென்றும், படர்கடலைக்
கலக்கத் திறமுடையாரோ? உலகிற் கடவுளெண்ணும்
இலக்குச் சிறுமதி மானிடர், எத்தனைபேர் எண்ணினும்,
விலக்கத் திறமுடையாரோ? விதித்தது மேனிற்குமே.

ஆற்றலென்னே, அதிகாரமென்னே, அருளாண்டவனைப்
போற்றலில்லாது? பொருப்பெதிர் தோளரும், புட்டெனவே,
கூற்றனுக்கே யிரையானார்: இறைவன் குவலயத்தை
மாற்றவல்லாரையும் மாற்றவல்லான் ஒருமாத்திரத்தே.

(தத்துவ ஆராய்ச்சி)

சித்துரு வாகின்ற தெய்வமல்லால், தெய்வம் செய்யுலகில்
நித்தியமில்லை, நிகழ்வன, நிற்பன: நீணுலகப்
பத்தியிலேறக் கவன்று நம்காலம் பறக்கவிட்டால்,
தத்துவங் கண்டு சுகிப்பதெந்நாள் அச்சம் தாழ்ந்திடவே?

பண்ணுளுழைத்துப், பல பாடுபட்டுப், பரதவித்து
மண்ணுள் புவியில் இம்மண்ணுளும் ஆக்கையை வாழவைப்பீர்!
பின்னாள் வருவதை யுன்னாதிருக்கும் பிழைதவிர்ப்ப
தெந்நாள்? உழைப்பதிங் கெந்நாள் நம்ஆத்ம மெய்யின்பத்திற்கே?

அன்னம் பயில்கின்ற ஆக்கையி லாசை அதிகரித்தோம்;
தன்னந்தனித் துடல் சாகின்றகாலம் தவிர்ப்பதுண்டோ?
முன்னங் குடிகொண்ட முன்னவன் சந்நிதி முந்துவதற்,
கின்னம் பிறப்பெடுத்தாலு முண்டோ மனம் எண்ணுவதே?

நிந்திக்கவோ இந்த நாவளித்தார்? நித்யம் நேயமுடன்
வந்திக்கவே; உயர்வானுளும் ஈசன் மகிமை கண்டா
னந்திக்கவே இவ்வகிலந் தந்தார்; அங்கருள் தெரியச்
சிந்திக்கவே இந்தச்சென்னி தந்தார்; என்று சிந்திக்கவே.

ஊனந்தமண்; உயிர்காற்று; ஐம்புலன்கள் உணர்த்துவதே
ஞானந் தனித்தது; உயிர்கள் இழுப்பது நட்புத்; துன்பம்
ஆனந்தம் மூளையறிவது; மூளை அணுக்கள் என்றால்,
நான் எந்த மூலையிற் றொளித்தேன் இந்த நாடகத்தே? 70

தற்பிறப் பிங்கு தரித்துக் கண்டாரன்றித், தாம்பிறந்த
முற்பிறப் பின்னதென்றார் அறிவார்? இதின்முன் விரும்பி
இப்பிறப் பெய்தினரோ மக்கள்? கன்மத்தின் எய்தினரோ?
எப்பிறப்பாளர்க்கும் இன்பமொன்றே செய்தல் எம்கடனே.

கன்மத்தினால் வந்த தாக்கை யென்றால், முதற் கன்மமென்ன?
உன்மத்தினால் கெட்டகன்மஞ் செய்தால், அது உடற்றல், செய்த
ஜன்மத்திலே தெரிந்தாலல்லவோ தண்டிப்பாகும்? சிறு
வன்மத்தினால் எதிர்செய்தல் நந்தெய்வத்தின் மாண்பலவே.

இம்மாபிறவிக் கடல்நீந்தி ஈசனிடங் கலத்தல்
நம்மா லடைவுறும் மோக்ஷமென்பார்: அதைநண்ணில், அதிற்
சும்மாவிருத்தல் சதமோ? ஒழுகுந் துளிப்பெருக்கம்
அம்மாகடலிடஞ் சேரின், அப்பால் அங் கவைசதமோ?

ஏனோ இடர்க்கு நடுங்குகின்றேன்? மெய்யெடுத்த திங்கு
நானோ? அறிவுடன்றானோ? நலிந்திங்கு நைவதெல்லாம்
ஊனோ, அலது, எனதாருயிரோ? அவ்வுயிர் படைத்த
வானோன் எனைத் தள்ளுவானோ, தள்ளாத வருத்தத்திலே?

நம்பிக்கை யற்ற நரர்வாழ்வு, இருளூற்ற ஞாலத்திலே
தும்பிக்கை யற்ற ஒருயானை வாழ்வதுபோல், தொலையா
வம்புக்கும், வாசிக்கும், மல்லுக்கும், வேதைக்கும், வஞ்சனைகூர்
அம்புக்கும் ஓர் இலக்காவதல்லால், இன்படைவிலதே.

காராளும் நெல்லின் கதியாளவல்ல கடவுளுக்குப்
பாராளு மன்னர் பதமாளுதற் கொரு பஞ்சமின்றே:
நேராளு மானிடர் நெஞ்சில் நின்றோன் நம் நிலைதிருப்ப
ஏராளம் வல்லமை யுள்ளான்: என்னே மனம் ஏங்குவதே?

சாவினுக் கப்புறம் என்வருமோ என்று தட்டுக்கெடேல்:
கோவெனும் ஈசன் குணமுடையான்: மென் குழந்தைகட்கும்
ஏவினன் அவ்விதி: எத்தனையோ உயிர வகினவே:
ஆவிக்குச் சாவில்லை, மற்றொருயாக்கை அடைவுளதே.

நினைப்பாற் கொடியது சாக்காடு: தம்பொருள் நீங்குமென்று
நினைப்பார் சில்லோர்கண்: உறவோரை நீங்கற்கு நைவர்
வினைப்பால் நிறைவு பற்றாததும், சிற்சிலர், மேற்பதவி [சில்லோர்
மனப்பால் குடித்தது உறாததும், எண்ணி வருந்துவரே.

நகமிற்றுப் போயின், விரலுக்கென்னும்? தன்னை நண்ணும் உடல்
இகமிற்றுப் போயின், உள்ளாவிக் கென்னும்? பிறப்பெய்திய ஞா
பகமிற்றுப் போயினும் பண்பிறுமோ, அதின் பண்பிறினும்,
சுகமிற்றுப் போகுதலுண்டோ? அவ்வாவிக்குச் சொந்தம்அதே.

பூமிக்குத் தேகம்;நம் ஆத்மா புவனம் பொறித்தவர்க்காம்;
நாமம் உலகிற்கு; நல்லறம் செய்நலம் உற்றவர்க்காம்;
தீமைக்குச் சித்தங்கொடாது, அருளீசனைச் சிந்தித்திடின்,
ஏமனுக் கென்னபங்குண்டோ, நமைவிட் டெடுப்பதற்கே?

இத்தனை நேரத்தில், எத்தனையாயிரம் எண்ணம் உயிர்
செத்தன: வேறுபிறந்தன: தீமைசெயாது, அன்புசேர்
சுத்தமனத்தினராகி, நம்அத்தன் துணைபெறின், நாம்
ஒத்த மனத்தின ராவோம், மைக்காலன் ஒறுக்கினுமே.

போவதெல்லாம், திரும்பும்: திரும்பும்பொருள், போவதுமாம்;
சாவதெல்லாம் பிறக்கும்: பிறக்கின்றவை சாவவையே:
ஈவதெல்லாம் எடுக்கும்முறை ஈசனுக் கென்றுமுண்டே:
ஆவதெல்லாம் அருட்கட்டளை யென்றுள் ளடங்குகவே.

குறைமதி யாளக்,குவலயம்வாழ் மக்கட் கூட்டத்திலே,
கறைமதிபோல், இன்பதுன்பம் உண்ணாடிக் கலந்தனவே:
நிறைமதிபோல் இன்பம், நள்ளிநள் போல்துன்பம், நிற்கும் சில்
பிறைமதி தேய்ந்து மிகுந்ததுபோலும், பிறவின்பமே. [கால்:

துன்பம் தொலைவதில், ஓரின்பமாம்: மற்றது தொலைந்தால்,
இன்பம் தொடர்வதில், ஓரின்பமாம்: இன்பம் எட்டிவிட்டால்,
பின்புந் தொடர்வதற் கோரின்ப மின்றிப் பின் இன்பமில்லை:
தன்பற்றினா லன்று, பின்பற்றினால், இன்பம் சாருவதே.

பன்னூறு காலம் உடம்பால் அளந் திந்தப் பார்நடந்தால்,
என்னூறு மூதியம்? கண்டதிற், கேட்டதில், எண்ணியதில்,
தொன்னூல் அறிந்ததில்,இன்பந் தொடர்ந்ததில்,தூத்ததில், இங்
கைந்நூறும், ஐம்பதும், ஐந்தும் ஒன்றே அறிவாளருக்கே.

தூரம் சிறுத்தனக், கிட்டப் பெருத்தனத், தூரம்பின்னும்
பாரம் சிறுத்தன, பார்வைப் பொருட்கள், பயணத்திலே:
நேரம் செலச்,செய்ய நேர்வன,செய்ய நெருங்குவன,
தீரமுடித்தன, தாம் கொளும் ஊற்றம் திரிபடுமே.

எச்சிலுங் குப்பையும் தாவர மோங்குதற் கேற்றவளம்:
நச்சுறுங் காஞ்சிரத் தாகும் அமிர்தமும் நாண்மருந்து:
குச்சிலில் வாழ்ந்து, குறை மிகுந்தார்க்கும், குலக்குடியார்
மெச்சுங் குணம் பலவுண்டாம்: துன்பத் தின்பம் வேர்கொளுமே.

என்னே உலகம்? மற்றெண்ணத்தில் ஆழ்ந்திருந்தால், அதுதான்
இன்னே மறந்தது: அதுகனவோ? நினைவைப் பிரித்தால்,
பண்ணாடை அட்டபடியாம்: உணர்வைப் பகுத்தெடுத்தால்,
பின் நானுமில்லை, உலகமுமில்லை, சொற் பேசுதற்கே.

என்னதென்பேன் இங்கு நான் செய்த நல்வினை; ஏனைய நான்
சொன்னதும், கேட்டதும், செய்ததும் தோன்றித் துரிதம்விடும்
மின்னலென்பேன், விளையாடலென்பேன், வெளிவேட மென்பேன்,
பண்ணிய பொய்க்கதைக் கோர்வையென்பேன், சொப்பன மென்ப
[னே.

சட்டத்திலே வரும்நீதி சற்றே; மக்கள் சாதிக்கின்ற
திட்டத்திலும் முழுத்திட்ட மின்றே: செயல் தெய்வஅருள்
வட்டத்திலே நின்றவெல்லாம் நடக்கும்; வயங்கும் அன்பு
வெட்டத்திலே வைத்துச் செய்வதெல்லாம் அருள் மேவுமன்றே.

வானென்ப தோரிடம் அன்றே: நரகம் வகுத்திருந்தாற்
றூனும் அதோரிட மாகாது: அநுபவம் தங்கும்நிலை
ஈனமென்றால், அதுவே நரகாம; உயர்வென்னில், அந்த
ஆனந்தமே உயர்வானும்: இரண்டும் இங்காவனவே.

(பக்தி)

எல்லாரும் ஞானம் தொடரார்: வன் யோகம் இயற்றியிட
வல்லாரும், சிற்சிலர்: இவ்விரு பெற்றியும் வாய்க்கவல்லா
ரல்லார் பலருளர்: அன்னவர் ஈசன் அருள் பெறற்குச்
சொல்லாகும் மார்க்கமொன்று: உள்ளார்ந்த பக்தி தொடருவதே.

வேதங்க ளோதுதல் வேண்டுவதில்லை; விரித்தரிய
வாதங்கள் செய்ய அகத்தியமில்லை; வருந்திப்பல
காதங்கள் செல்லவும் கட்டாயமில்லை; கடவுள்மலர்ப்
பாதங்க ளெண்ணி உளங்காத்தல் போதும், பதம்பெறவே.

நன்னேர் விரும்பிய நெஞ்சமும், வஞ்சநடை யின்மையும்,
சொன்னேரும், அன்பின் செயலு, முள்ளார்க்குத், தொழலின்றியே
தன்னேரிலா அருட்டெய்வம் துணையெனில், அத்தகைகொண்
டெந்நேரம் பக்தி கொள்வார்க்கு முண்டோ, மலைப்பெய்துவதே?

கற்றார் ஒருகரை கண்டார்: நற் கல்வி யொடு குணமும்
உற்றார், இலக்கரை யுற்றார்; இரண்டுமுற் றுண்மையுடன்
பற்றே யிலானடி பற்றிக்கொண்டார், சொல் பதவியெல்லாம்
பெற்றார்; அவர்தம் பெருமை எம்மட்டென்று பேசரிதே.

பெற்றாள், பிதா, நம்முடன்பிறந்தாரொடு பிள்ளைகளும்,
உற்றாரும், நம்மிடம் சேர்ந்தாலும், நோயொன் றுறுமிடத்தே,
சற்றாயினுந் துணையாவார்களோ? தனித்தே சகிப்போம்;
கற்றுவென நின்று காத்தாள்வ தீசன் கருணையொன்றே.

அல்வந்தணையின், அறும்: அடைநோவறும்; ஆழ்ந்தகன்ற
கல்வி செருக்கறும்; துன்பம் வருத்துங் கடுமையறும்;
நல்வந்தனை கொள்ளும் நெஞ்சம்; அஞ்சாது, நமனையுமே
வெல்வம், தனிப்பெருஞ் செல்வன் றுணைப்பதம் மேவிடினே.

(துறவுவேண்டாமை)

அனைவருமே துறவாவோ மெனிற், படைப் பாவதெங்கே?
மனைவியெங்கே? பெறு மக்களெங்கே? நன்மணமுமெங்கே?
வினை விளைவாத லெங்கே? அன்பெங்கே? வெல்லும் வெற்றியெ
நினைவரு மீசனைப்போற்ற லெங்கே, இந்த நீணிலத்தே? [ங்கே?

துறந்தால், கொடும் அகங்காரம் துறக்க: ஓர் சொல்லுக்குவாய்
திறந்தால், அஃதுண்மைக் காகத் திறக்கச்: சிதைவில்புகழ்
சிறந்தால், அது நன்மை செய்து சிறக்கத்: திரியுலகிற்
பிறந்தால், உபகரிக்கப் பிறக்கப் பெரும் பீடுறவே.

(அகந்தையறல்)

நாடுமட்டே நம்மகங்காரம்: மானிடர் நண்ணும் சுடு
காடுதொட் டாக்கையின் கட்டழிந்தாற், பின்கதி யெதுவாம்?
பூடுபுல்லாதிக் கதுவளமாம்: வளம் பூண்ட இம்மண்
கூடுதொட்டாருயிர் நிற்குமட்டே நங் குலஉயர்வே: 100

நாட்டுக்குள்ளே சிறியோர் பெரியோரென நாட்டுகின்றோம்:
காட்டுக்குள்ளே செல்லின், அத்தரமில்லை: அக்காட்டில் மரக்
கூட்டத்தைச் செயதகை நம்மையும செய்த குறிப்பறிவோம்:
சாட்டத்திற் கேது வகையுண்டு? எல்லாம் நம் சகோதரமே.

எல்லாவுயிரும் நமைப்போ லிருக்குமென் றெண்ணுகிலாப்
பொல்லாங்கினால், அன்பு பாராட்டும் வேலையைப் போகவிட்டு
வல்லாவழக்கும் மதங்காட்டும் வேலியும் வாங்கிக்கொண்டால்,
சொல்லாத் துயரங்க ளெல்லாம் அவ்வேலியில் தோன்றுமன்றே.

காலங் கெடுத்தது, கன்மங் கெடுத்தது, கட்டுக்கொண்ட
கோலங் கெடுத்தது, தெய்வங் கெடுத்தது, கோதுடைய
ஞாலங்கெடுத்தது என்றேனோ நொந்தோம்? நன்மையற்ற நந்தம்
சீலங் கெடுத்ததுவே நாமடைகின்ற தீமைகளே.

(நடுநிலை)

கெடுநிலை மாற்றிவிடலாம்; பொருள் கிடைத்தோரும் எண்ண
மிடுநிலை எய்துதலாம்: கல்வி எய்துதலாம்; விரும்பப்
படுநிலைக் கீர்த்தி யுறலாம்; ஒருபட்சம் பற்றுகிலா
நடுநிலை எய்தல் அரிதரிதே இந்த ஞாலத்திலே.

இன்பங்கள் நாடிய மானிடர் தம்முள் இடறுவதால்,
துன்பங்கள் மேவும் இம்மண்ணிடை: இன்பந் தொடரொருவன்
தன்பங்கில் ஏனையர்தம் பங்கெடாமற் றடுப்பதற்கே
அன்பங்கு வேண்டும்: பொதுவின்பம் நாடற் கறிவொடுமே.

வட்டமிட்டோடிய வாழ்க்கையில், ஆண்டிக்கும் மன்னனுக்கும்
திட்டமிட் டொவ்வொரு பாட்டினைச் சேர்க்கினும், தெய்வம்ஒரு
மட்டமிட்டார்; பிறரைப்பற்றி வாழுதல்; ஓர்மரணச்
சட்டமிட்டார்; அங்கு கண்ணியபேத மென் சாற்றுதற்கே.

(அருள்மாட்சி)

கார்போற் கடலிற் பிறக்கும், சமய்நிற்கும், காவகித்துப்
பார்மீது தூய அமுதாக்கித் தாவரம் பச்சைபெற
வேரூடும் மீதும் விரிகுவதாம் விண்ணின் வீழ்ந்தொழுகும்
நீர்போ லிருக்கும்; அருள், தாழிடம் புகும் நீர்மையதே.

தனக்கென்று வாழ்கின்ற தன்மை மனிதர்தமக்கு மட்டோ?
வனக்குன்றில் வாழும் விலங்குக்கு முண்டு: மனிதர்தங்கள்
மனக்கிளர்வால் வரும் மாட்சி யென்னோ? தம்மதி செலுத்தி
இனக்குழுவோருக் கியலின்பம் நாடி இருக்கின்றதே.

(அன்பு)

நாடாளி னென்ன, நகராளி னென்ன, நரர்க்குச் செல்வம்
கோடானு கோடி யிருந்தென்ன, மேனியிற் கோட்ட முரு
வாடாதிருந் தென்ன, வாயாத்திறம் பலவாய்த்து மென்ன,
ஈடாகுமோ உள்ளன் பில்லாக் குறைக்கவை, எண்ணிடினே?

துன்பில்லை யென்றல்லவோ விழைவார் சுவர்க்கப் பதவி?
வன்பில்லையாகில், வரும் இந்தவாழ்க்கையில் வான்மகிழ்ச்சி:
இன்பல்ல இந்திரன் மாட்சியும் உள்ளத்தெழுச்சி யின்றேல்:
அன்பில்லையேல், விண்ணும்வேண்டேன், அமரர் அழைக்கினுமே.

மெய்யர்ன் அன்பின்றித், தன்னயம், பேர் இவை மேவவெண்ணி
ஐயாயிரங் கொடை யீந்தென்னே? மீண்டொன் றடையவெண்ணிப்
பெய்யாது, மாகடல் மொண் டுலகுய்யப் பெய்யும்மழைபோல்,
செய்யாது செய்த உதவியன்றோ மெய்ச்சிறப்புடைத்தே?

தாழ்வார் முறையிற் பணிகுவரென்னிற்; றனமுடைத்தாய்
வாழ்வார், இவர்நம் கடவுள் படைப்பென்றீ, மற்றவர்மேல்
சூழ்வார் அன்பாம்நெறி யென்னில், கலங்கித் துன்பக்குழியில்
வீழ்வார் குறைந்து, உலகின்ப முள்ளோங்கி விளங்குவதே.

(மெய்ம்மை)

பொய் யாதரவினும், போராட்டம் நன்று: புகன்றபடி
செய்யாதவரினும், சேய் நன்று: கோணும் சிமிட்டுடைய
ஒய்யார மாதினும், ஊமைப்பெண் நன்று: உபசாரமற்ற
செய்யா ரமுதினும், கூழ்நன்று, மானம் நிலைத்தவர்க்கே.

பொய் யுறுவார் புன்மையே யுறுவார்: கெடும்பொய் யகற்றி
மெய் யுறுவார் உயர்வே யுறுவார்: தம்மெய்வேலைசெய்யக்
கையுறுவார் கனத்தை யுறுவார்: நம்பிக்கை யெடுக்க
ஐயுறுவார் உறுவாரோ அருள்தரும் ஆனந்தமே?

(உயர்வு தாழ்வு)

சாதி யுயர்ந்த தென் றெக்களிப்பார் சிலர்: சாஸ்திரங்கள்
ஓதி யுணர்ந்ததினாலே, அவ் வோதுதலுக் கிணங்க,
நீதியும் அன்பு முயர்ந்தால், உயர்வு: அந்நெறி யிலதேல்,
ஆதி யுயர்ந்த பிறப்பால் உலகத்திற் காவதென்னே?

இனத்தாழ்வினால், இழிவெய்தாது: இப்பார்ன்பம் எய்தவொண்
தனத்தாழ் வொருகுறை யாகாது: நுண்மதி சாரந்திலதேல்[ணுத்
கனத்தாழ் வதனினும் வாராது: மற்றையர் காரியத்தே,
வினைத்தாழ் வினைக்கும் குணத்தாழ் விழிபு விளைப்பதுவே.

குலஞ்சிறி தாயினென், பேர் சிறி தாயினென், தாங் குடிகொள்
இலஞ் சிறிதாயினென், எண்ணு உலகத்தில் ஏற்றும் பொருள்
வலஞ் சிறிதாயினென்? உண்மையும், அன்பும் வகித்தவர்சேர்
நலம் சிறிதன்று: எண்ணிப்பாரீர், அருள்பெற்ற நந்தனையே.

எத்துறை யாயினும், ஓர்பழிப்பின்று; உண்மை யெய்தி மனம்
ஒத்துழைப்பாருக்குப் பீடுள்ளதே: உல குய்யுவதேர், [தோ
சொத்துடையார், அதை வைத்துநின்றால்? உண்ணும் சோறுள
வித்திறைத் தேரின் உழுவோர்தம் நெற்றி வியர்ப்பின்றியே?

சின்னப் பொருளென் றொதுக்கிவிடேல்: குற்றம் செய்துவிட்டா
தன்னந்தனித் தொருதாம்பின் கயிறும் நம் சத்துருவாம்: [ல்,
நன்னெறி நின்ற மனச்சாட்சிபோதம் நமக்குண்டெனில்,
மன்னர் எதிர்க்கினும் வெல்லும்படை நம் மருங்கிலுண்டே.

சேற்றில் வளர்ந்தது செந்தாமரை: கடற் சேற்றினுள்ளே,
தோற்றும் விலைபெற்ற முத்தே: துதிபெறுஞ் சோதிமணி
சீற்ற அரவின் றலை மீதிருக்கும்: தெளிந்துலகம் [மே.
போற்றும் பொருள் பொருள்செய்யாப் பொருளினும் போந்திடு

(உள்ளிடுக்கம்)

உள்ளளவே நம் உரையளவாம்: நம்முளம் உறுதி
கொள்ளளவே நம் செயலளவாம்: அன்பு கொள்ளுகிலார்
குள்ளளவான செயலுடையார், குறும் எண்ணமுள்ளார்;
எள்ளளவேனும் அவரால் உலகத்திற் கின்பமின்றே.

தண்ணம் பெருங்கடலிற் சிறுமீன்கள், சதமெனினும்,
வண்ணம் பெருகுஞ் சுறா ஒன்றினுக் கிரை வாய்ப்பதுபோல்,
திண்ணம் குறைந்தவர் தீரர்க்கும், தன்னயந் தேடுவராய்
எண்ணங் குறுகியவர் பொதுநோக்கர்க்கும், ஏவலரே.

(கேடுசூழாமை)

ஒருவர்க்குங் கேடு நினையேல்: உன்கேடு ஒருவன் நினைத்தால்
இருவர்க்கும் மேற் பொதுநிற்கின்ற ஈசனையெண்ணி மற்றோன்
நிருவிக்குங் கேடு தடுப்பதற்கேற்ற நெறி அருளால்
வருவிக்க லாகும்: எதிர்கேடு தேடல் மதிகெடலே.

இடுங்கிய உள்ளுடன் நோயேற்கும் போது, எமன் எய்தல்எண்ணி
நடுங்கிடும் போது, நமக்குள்ள யாவும் நழுவவிட்டே
ஒடுங்கிடும் போது, உற்றநோய், எமன், ஏக்கம் ஒறுத்தலுடன்,
பிடுங்கிட ஓர் மனச்சாட்சியும் வேண்டுங்கொல், பித்துறவே?

சிறிய வெல்லாம் பெரிதாய்த் தோன்றும் சின்னப் பருவமுதல்
பொறிய வெல்லாம் விட்டு மெய்ஞ்ஞான முள்ளம் பொருந்தும்
நெறியவை காட்ட மனச்சாட்சி யொன்று நிறுவியதை [வரை
அறியநின்றார், பிறர்கே டாவலிப்பதற் கஞ்சுவரே.

நாட்போகு மென்பதுந் திண்ணம்: கொடிய நமன் வருங்கால்
ஆட்போகு மென்பதுந் திண்ணம்: சகோதரும் போனறவரை
வாட்போரில் வீணில் மடித்தால், வதைக்க வதைக்க நமைக்
கேட்போன் அணுகுவன்; மீட்போரும் அன்று கிடைப்பதின்றே.

(அவா)

முன்னிலதாம் இச்சை மேவிக்கொண்டால், அது முற்றுப்பெற
இன்னலும் முன்னில வேண்டும்; விழைந்தன எய்துதலும்
பின்னிலும் இச்சைக்கு வித்தாம்: வினையும் இப்பெற்றி யெல்லாம்
உன்னிடுவார் நலமல்லாத ஆசை ஒழிப்பரன்றே.

நிறத்தால் உருக்கொண்ட மந்திரத்தால் உள் நெகிழவைத்துப்
புறத்தால், அணிகலன், ஆடையினால் புந்தி போர்த்துக்கொண்
அறத்தால் வரும் அழிவில்லாத நன்மையை ஆதரிக்கும் [டால்,
திறத்தால் திகழ்கின்ற நாள் எந்தநாள் இந்தச் சீவிதத்தே.

(வினைமாட்சி)

திரை யெழுந்தாடும் கடல்போல் அலைக்கின்ற சீவிதத்தில்;
நுரை யெழுந்தாலென்னத் தோன்றிமறை அற்ப நோக்கம்விட்டு
வரையெழுந்தாலென்ன,மாண்பொருள் சாதித்துவைத்திருந்தால்,
நரையெழிற் தோய்வுறும் நாளினும் ஆனந்தம் நல்குமதே.

அலைபெறு வாழ்க்கைக்கடல் நீர்க்குமிழிக ளாயுதித்துத்,
தொலைவுறும் புன்மைச்செயல் தொடராமல், துலங்குகின்ற
விலைபெறு முத்துக் குளித்தெடுத்தென்ன விழுச்செயலே
நிலைபெற, இன்பம் உலகோங்க, நின்று நிகழ்த்துவமே. 130

(உள்ளப்பயிற்சி)

உள்ளெனுங் கோளத்தி லுண்டாம் சுரங்கத் துழைப்பவரே,
தெள்ளெனச் சோதி திகழ்கின்ற தத்துவச் சீர்மணிகள்
அள்ளுவர், ஈவர்: அவைவாங்கி மாந்தர் அணிந்தறிவில்
வள்ளலராய், மதிமேன்பாடெள் ளாருள் வயங்குவரே.

செயலுக்குத் தாய் எண்ணம்: எண்ணத்தின் றாய் கல்வி,சித்தவிர்
அயல், கூட்டுறவு, புடைபொருள், முன்னம் அமைந்திருந்த [த்தி
இயல், முதலாயின: எண்ணங்கள் நல்வழி யேற்றிவிட
முயலுவதால், செயல் நன்றாய்ச் சதா இன்பம் மூண்டெழுமே.

மண்பொருள் சற்றுக் குறையினென், மிக்க மலியினென்?நாம்
உண்பொருள் பாலமு தாயினென், கூழினொ டுப்பெனிலென்?
நுண்பொருள் நூல்வழியோ டல்வழிக்கண் நுகர்ந்தவர்க்குக்
கண் பொருளாய்க்,கல்வி நல்லுணவாய், உட் களிகொளுமே.

(நிகழ்காலத் தேற்றம்)

புகழ்கின்ற பண்டையக் காலம் பொற்காலம், புவியினிடை
நிகழ்கின்ற காலம் கொடுங்காலம் என்று நினைத்,ததனை
இகழ்கின்றதே தொழிலாய்த், தொழில்யாவும் இழக்கவிட்டார்
திகழ்கின்றதெங்ஙனம்? எக்காலமுங் கண்ட தெய்வமொன்றே.

அன்றே எழுந்த வெய்யல், நிலவின்றும் அடைகின்றதே:
நன்றேசெயின், இன்றும் நன்றே விளைவுண்டு: நண்ணும்மதி
யொன்றே; பிறபிறப் பொன்றே; உணரும் உணர்ச்சியொன்றே;
தொன்றே நிலவும் இயற்கை யொன்றே: என்னை சோருவதே?

(நேரமதிப்பு)

நேரமன்றோ பொருள்? நேரத்தை நாம் நிறுத்தாற்றும் உப
காரமன்றோ உயர்வுந் தாழ்வும் ஈவது? காத்தன் தந்த
வாரமன்றோ இந்தவாழ்வு? இதில் நன்மையை மன்னுவித்தல்
பாரமன்றோ? நமக் கேனையவாழ்விற் பயனென்னவே?

(உழைப்பு)

பண்டே பெரிய குலத்தோம்: முன்னால் ஒன்று பாடுபட்டுக்
கண்டேமிலை என்பர்ஓர்சிலர்: சொத்தினைக் கள்ளர்கொண்டால்,
கொண்டேது வேலை தொடுப்பார்? இரக்கக் கைகொள்ளுவரோ?
தொண்டே புரிகினும், சோம்பலில் மேன்மை தொழில்செயலே.

சீமான் பதவி யடைந்தோம்: செழுங்கல்வி சேகரித்தோம்:
கோமான் இதயத்தைக் கொண்டோம்: இங்கின்பம் குறிப்பதெல்
நாமாந்தினோம்: என்பதிற் பெரிதே உற்ற நம்கடனை [லாம்
ஆமாறு செய்தனம் என்ற எண்ணத்தெழும் ஆனந்தமே.

நேராய் நலத்துக் குழைத்த துண்டேல்: சர்வநேயன் செயல்
ஆராய்ந் தறிந்துள்ள நேரமுண்டேல்; இங்கோ ராருயிரைப்
பூராயம் நேசித்த நேரமுண்டேல்; அப்பொன் னேரமெல்லாம்,
பாராய், பழுதல்ல, நாம் வாழ்வுகொண்ட பயனடைவே.

நம்மாலியன்றதில் உத்தமம் செய்தல் நம்மேற்கடனும்:
கைம்மாறு வேண்டுதல் வேண்டாம்: தரும்கடன் கர்த்தனுக்கே:
இம்மாநிலத்தில் அநுபவம் விதித்தல் ஈசன் செயல்:
எம்மானிடர்க்கும் தகுமா றளித்தல் எளிதவற்கே.

உண்மையினோ டுழைப்பானன்றி, உத்தமம் உற்றிடுவான்
திண்மையினுங் கடனில்லை. பயன்றரல் தெய்வவருள்
வண்மையதாம்: பயனெண்ணா துழைக்கின், மகிழ்விக்கவே [ளே.
ஒண்மையுளான் இருக்கின்றான் என்றெண்ணி யுழைத்துக்கொள்

திண்ணம்,பொறுமை இரண்டின்றி மாணும் செயலிலதாம்:
எண்ணமும், சொல்லும், செயலும் இம்மாண்புகள் ஏய்திநின்ற
வண்ணமட்டாகும் நம்வாழ்வின் பயன்: அவை வாய்த்தவரே,
கண்ணியராகிப் பொலிவார் உலகுறுங் காரியத்தே.

உண்பாயென்றால், இங்குழைப்பா யென்றதியில் ஓர்சட்டமே
திண்பாய் ஒருதெய்வம் இட்டனதே: தத்தம் செய்தொழில்கள்
பண்பாய்ச் செய்வோர்க்குப் பயமில்லை: சோம்பற் படுவர் துயர்க்
கண்பாய விறபர், உயிர் பொறுக்காரிற் கடையரென்றே.

கீழ்மையிலா மனத்தாழ்மை நன்றே: கல்வி கேள்வியுற்ற
ஆழ்மதியோ டொளகல்மனமே நன்று: அற்பமாங் குடியில்
வாழ் மனமேனும் மடியில் மனமே நன்று: வாழ்க்கையுள்ளே
ஊழ்முறை கண்டிட், உழைப்புவிடா மனம் உத்தமமே.

செயப்படும் வேலை ஒழுங்குடன் செய்யின், திடம் பொழுது
நயப்படும்: பாழ்பொருள் போகாது: கோள் நடவாதெனினும்,
பயப்பட வேதுமில்லை: அவ்வொழுங்கு பழகிவிட்டால்,
வியப்பெழக் கூடும் வினையாட்சி, வெற்றி விளைவுறுமே.

நாளையென் றோர்நலம் நீக்கிவையேல்: நற்செயல் புரிய
வேளைநன் றே யிது: செய்யாதிதை இன்று விட்டுவிட்டால்,
மீள அவ்வெண்ணம் வருமோ? வந்தாற் செய்ய வேளையுண்டோ?
ஊளைநரிக் குடல் போமோ? எவ்வா றுண்மை ஊகிப்பதே?

விருப்பால் உலகத்தவர் சூறையாடி விழைவொடிந்த
நெருப்பால் வெதும்பினும், வாழ்வால் மகிழ்ந்து நெளிந்திடினும்,
ஒருப்போல் நிலைபிசகா தொளிகாட்டும் உயர் உடுப்போல்,
இருப்பார் பெரியர் உல்கெண்ணிடாமல், இலங்கிக்கொண்டே.

(பொருள்)

மணம் வேண்டுமாகிற், பணமவேண்டும்: வெம்பசிவாட்ட அன்னம்
உணவேண்டுமாகிற்,பணமவேண்டும்: அன்றி,உயிர்துறந்தால், [டும்
பிணம்போக வேண்டிற,பணம்வேண்டும்: வாழ்வில் எப்பேறுங்கிட்
பணம் வேண்டுமாகிலும், மைப்பணமே வேண்டுமே இப்பாரிடத்தே.

எல்லாப் பொழுதும் பொருளுக் குக் கண்மையர் எய்திடுவார்:
அல்லா தொருபொழுதுங் கைவிட்டால், அன்றவரும் விட்டார்: [ல்
பொல்லாதவனென்றும் நவையார்: [illegible] ங்கட் பொருள்கொடுத்தார்
சொல்லாகும் காற்றையும் நிற்பார், முடமன் முறைகட்டியே.

இறுக்கும் பெருங்கடலுக் கிலை எல்லை: எரிக்குந் தொல்லை
வெறுக்கும் அளவினுக் கோருமை யல்லை: வெறுங் கணக்கர்
ஒறுக்குங் கொடுமைக் [illegible] நாடில்லை: [illegible] வழிதப்பலாம
பொறுக்குந் திறமை [illegible] வேண்டும் [illegible] நலத்தே. 150

பொருப்புறு நல்லதுறவோ ரலாதிந்த [illegible] வி[illegible]த,
இருப்புறு மற்றைத் துறவிகள், இல்லவர் சனத்தை
விருப்புறுவா ரெனில், அங்கவர் வேடமென்? விட்ட துறவி
யுருப் பெறுவாரினும் மேலவர் இல்லத் துறைபவரே.

(இயற்கைக்காட்சிநலம்)

நூற்படுங் கல்விக்கு மேலாம், இயற்கையை நோக்குவதால்
ஏற்படுங் கல்வி: இயல் ஈசன் [illegible] எழில்படர்ந்து
நாற்புறஞ் சூழ்ந்தது நம்மை: உறுமின், [illegible],
மேற்படும் தெய்வவணக்கம்: உள்ளானந்தம் மேவிடுமே.

உலக வியற்கைப் பொருளும், இயற்கை யொழுங்கும், உள்ள
மிலகக்கண் டாய்ந்து வியப்புறல், ஈசனை ஏத்துவதற்
கலகிலதாம் வழி: அவ்வழி சென்றார், அன்பருக்குள்
திலகமதாய், அருள் என்றென்றும் ஓங்கித் திகழுவரே.

பொங்கிய குன்றமும், காடும், பள்ளமும், பூநிலவு
தங்கிய தாமரைப் பொய்கையும், புள்ளினம் தண்குரலால்
இங்கிதம் பாடச், செவிசாய்க்கும் சோலையும் இங்கிலையேல்,
மங்கும் இவ்வாழ்வு மகிழ்வற்று, மீளற்ற வாறென்னவே.

பட்டாடை, பொன்னகை, பாற்சோறு, வாழப் பரிந்தொருவர்
கொட்டாரம் ஈயினும் கொள்ளேன், இயற்கையில் கொள்ளைகொ
மொட்டாய், மணக்குமலராய், வரிவண்டு மொய்க்க இனக் [ண்டு
கட்டாய் வளர்செடி காட்டா தென்காலம் கவர்ந்திடினே.

நீலப்பளிங்கு பரந்தெனத் தோன்றிய நீள்கடல் என்
மேலைப்புறமும், தலைக்குயரே விண் விரிகடலும்,
கோலப்புளினம் கிழக்குங் கண்டேன், வெண்மணற் குந்தினேன்;
மாலைப்பொழு தென்னைத் தன்வசமாக்கி மகிழ்வித்ததே.

மகிழ்வித்ததே என்னை அற்புதமூட்டி; மதிமலரைத்
திகழ்வித்ததே; கண்கள் ஆனந்தவாழித் தெண்ணீர்முழுக,
அகழ்வித்ததே நெஞ்சை; அவ் வுயர்காட்சி என் னாருயிரை
நெகிழ்வித்ததே; உள்ளம் ஈசன் விலாசத்தில் நீந்தியதே.

மனமறந்தேன்: நித்தியனிலை அவ்விடம் வாய்த்ததுபோல்,
தினமறந்தேன்: மனையோ டிந்த வாழ்விற் றெரிவுடைய
சினமறந்தேன்: சற்றுநேரம் தயாநிதி சந்நிதியின்
கனமுற, நேயம்பெருக, என்னுள்ளங் கனிந்தனனே.

செங்கதிர் தோன்றுவதற்கு முன்னே, ஒண்சிறந்த வெள்ளி
திங்களைநோக்கிச் சிரிக்கின்ற வேளை தெளிந் தெழுந்தேன்:
எங்கும் நிரம்பிய மௌனத்தி லாழ்ந்த தென் னேழைநெஞ்சம்;
பொங்கிய தானந்தம்; நான் மறந்தேன் இந்தப் பூமியுமே.

எல்லா வுயிருந் துயின்றன: அந்த எழில் நிறைந்த
சொல்லா மகிமையைச் சூடிய காட்சியைத் தோற்றுவித்த
தொல்லாதி, என்றுங் கண்தூங்காத சோதி துலங்கியதைக்[டேன்,
கல்லாய நெஞ்சுங் கரையக் கண்டேன், மெய்க் களிப்புக்கொண்

(தன்னிலை சூழ்ந்து பரவல்)

வானாகி, வானினுடுவாகி வானின் வயங்கொளியாய்த்,
தேனாகித், தேனின் சுவையாய்த், தெவிட்டற்ற தெள்ளமுதாய்,
ஊனாகி, ஊனினுறவாய், உயிரின் ஒளிநிலையாய்,
நானாகி, நானல்லவனாகி நிற்கின்ற நாயகனே.

விண்ணவனே, விறல்வித்தகனே, ஒளி மேவிய நம்
கண்ணவனே, நங்கருத்தவனே, அருட் கார்பொழியும்
தண்ணவனே, எங்கள் தாரகமே, உனைச் சாருமனப்
பண்ணவனே, எங்கள் உள்ளமெல்லாம உற்றுப் பார்த்தவனே.

நெருங் கண்டகோளம் நிருமித்த நின்றிருக் கையலவோ,
சுருங்கண்ட மாமிதில் என்னையும் செய்தது, தோன்றுயிர்கள்
ஒருங்குண்டு வாழல் திருவுளத் தோர்ந்துயர் வானொழுங்கால்
கருங்கொண்ட லீந்த, பெருங்கொண்டலா மெய்க் கருணையனே!

எல்லா முனது செயலாயிருக்க, எனது செய
லல்லா தெனைப்பற்ற வொன்றில்லை யென்ப, தகத்திருந்த
நல்லா யுனைமறந்தன்றோ? எனதென்றும் நானென்றுமே
சொல்லாவ, துன்னில் வரு மொரு சின்னத் துளிகுறித்தே.

உன்னால் விளைந்தன நல்லதெல்லாம் இவ்வுலகத்திலே,
என்னால் விளைந்தன தீங்கில் ஒருபங், கெடுத்தினும் நான்
சொன்னால், அவையும் நினதே; அத்தீயவை, தூயவையே,
கன்னேர் என்னெஞ்சினைப் பொன்னேரதாக்குங் கருவிகளே.

உருப்படுமோ உல, கென்னுடல் அன்னை யுதரத்திலே
கருப்படுமோ, நின்கருணை யின்றேல் கதிதான்? கருத
ஒருப்படுமோ மனம்? ஒவ்வொரு தீங்கும் உறுமிடத்தே
வெருப்படுமே, புகல் என்றுமின்றென் றகம் வெம்பிடுமே.

மண்ணால் வனைந்த சிறுவீட்டிலே யென் மனமிருத்திக்,
கண்ணாடியான கதவமைத், திடல் கனி பரப்பி,
எண்ணாத கோடி யெண்ணங்களை என்னுள் எழுப்பிவிட்டு,
நண்ணாதபோல் நண்ணி நீயிருந்தாய்; இதின் நன்மையென்னே?

நினையான் நினைக்கவும; நன்றே நினைந்திந்த நீளுலகில்
வினையான் இயல்வ தியற்றவும்; நீதந்த வேறுயிர்க்குந்
தினையேனுந் தீங்கு நினையா திருக்கவும்; சேர்கின்ற என்
சினை யாதரிக்கவு மல்லால உண்டோ இங்கு செய்கடனே?

உனக்கா யுழைக்கத் தலைப்படின், நான் இங் குணவுக்கல்லால்
எனக்கா யுழைப்ப தெதற்கோ? துணைக்கொண் டிணையில்அருள்
மனக்காதலைக் கொடுத்துச சோகம்மாற்றி மகிழ்விக்கும்: என்
றனக்காய் வருபொருள் வேறிலை, நின்னருள் சாதிப்பதே.

சொன்னால், வறுமையும் செல்வமுந் துன்பம், சுடு பசியால்,
பொன்னால் விளையும பொறாமையினால்: அப்பொறாமை பின்னர்
ஒன்னார்தங் கூட்டம் விளைக்கும: அத்துன்ப மொழிப்பதெங்ஙன்?
என்னாவி காப்பதற் கித்தனை வேண்டுங்கொல் இன்னல்களே? 170

முன்னேறிச் செல்ல முயன்றால், பெரியர் முனிகுவர்: நான்
பின்னே நடக்கப் பொறுத்தால், சிறியர் பிடித்துந்துவார்:
இன்னே யிருக்கும் நிலையில் உற்றாரும இருக்கவிடார்:
என்னே இனிச்செய்வ தெங்கென்று போவ திறையவனே?

முனியார் முனிகினும், நின்னருள் முன்னிட முந்துவதே
இனியான் செய்யுங்கடன் என்றெடுத் தாய்ந்துன் எழிற்பதத்தை
நணி யான் பிடித்துக் கரையேற வெண்ணில், அந்நற்பிடியைச்
சனிபோல் இளக்க வருவார் கிரிசுரர், தர்க்கங்கொண்டே.

சரந்துண்ட பால் முலையைத் துண்டித்தாங்கு, நின் சோறெடுத்து
கரந்துண்டு, நின்னை மறுப்பாருடன் கலந்த டுவேனோ? [ச்
இரந்துண்டு வாழச்செயினும், வெங்கானத் திருத்தினும், என்
சிரந் துண்டமாக்கினும், செல்லவையேல் அந்தத் தீவழிக்கே.

கற்றதனாலும், கருமத்தினாலும், கரும மெல்லாம்
அற்றதனாலும், உனை யறியோம்: பெரும் அன்பகத்தே
உற்றதுவாகில், உனையறிவோம்: அன் புருவிடத்தே,
மற்றெதனாலும் அறிவதுண்டோ நின்பொன் மாட்சிமையே?

அண்டமெல்லாம் உன் அமைப்பாகும்; அண்டத் தமர்ந்துநின்ற
பண்டமெல்லாம் உன் படைப்பாகும்; என்று பகுத்தறிவாற்
கண்டவெல்லாவற்றி னுள்ளும் உன் கற்பனை காணுகில்,நான் [னே.
கொண்ட தெல்லாம் உன்னதென்று கொள்வேன், அன்பு கூடுவே

எல்லாப் பொழுதும், அவ்வுண்மை கண்டே, அன்பகத்திருந்தால்,
வல்லாத தாழ்வு வருகினும், உன்னதம் வாய்க்கினும் கே
டில்லா நடுநிலை தோன்றிச், சுகநிலை எய்துவதே;
பொல்லாத மாயையெனும் பேய் பிழைப்பற்றுப் போய்விடுமே.

நெய்கலந் துண்டிடல் ஆற்றலளாவல், நிறை கலவாப்
பொய் கலந் தாடுவதற்கோ, உள் புண்ணியம் பூப்பதற்கோ?
மெய்கலந்துன்னருள் வெள்ளங்கலந்து, உன் மெய்யன்பருடன்
கைகலந் தாடுவ தெந்நாள், கருத்திற் கலந்தவனே?

உலகங் கண்டாய், உயிர் வாழ்க்கை கண்டாய், அதி லுற்றவிடங்,
கலகங் கண்டாய், தன்னயத்தைக் கண்டாய், இங்கு கண்டவெ
விலகுங்கண்டா யென்னும் வார்த்தையைக் கேட்டும், விரி [லாம்
திலகங் கண்டாயிலையே, மனமே, என்ன செய்தனையோ? [வுலகத்

கூர்க்கின்ற வேதனையாலே, உயிர்கள் கொதித்த தெல்லாம்,
ஓர்க்கின்ற போதும ஒருவர் எடுத்துரைக்கும் பொழுதும்,
வேர்க்கின்றதே, மெய்விதிர்க்கின்றதே, மனம் மெய்யனருள்
பார்க்கின்றதே, நெஞ்சம் வேற்பட்டவாறு பதைக்கின்றதே.

ஓடியநாளும் திரும்புவதில்லை; உழைத் தொருகாற்
றேடியதில்லை அருட்பொருள்: சேர்த்தது பொய்ப் பொருளே;
பாடியதில்லை யுன் பொற்பதம்; உள்ளம் பழுத்துருகக்
கூடியதில்லை என்கை; அம்ம, நான்கொண்ட கோலமென்னே? 180

கல்லாத நெஞ்சம், கயவாளி நெஞ்சம், கருமவழி
நில்லாத நெஞ்சம், நிலையாத நெஞ்சம, நெறி யென்பதே
இல்லாத நெஞ்சம், இறைஞ்சாத நெஞ்சம, இரக்கமில்லாப்
பொல்லாத நெஞ்சம், இதெங்கே யிருந்து புறப்பட்டதே?

அளவற்ற தோற்றக் கடலிடைத் தாழ்ந்துள் ளலைப்படுவேன்,
கள்வற்ற நன் மனத்தேனாகி ஆர்வங்கசிந்து நிற்க
உளவற்ற பாவி எளியனைப்போல் இங்கொருவருண்டோ,
பிளவற்ற பராணுவாய், அண்டமாய் நின்ற பேரொளியே?

வழுவுறு மேழைமன முடையேன்; நின் மகிமையெண்ணாப்
புழுவிலுங் கேவலப் புந்தியுள்ளேன்; என் பொய் புன்மையெல்லாம்
கழுவிடும் பாங்குங் கருதுகில்லேன்; நின் கண்ணோக்கி னொளி
தழுவுதற்கென்ன தகையுடையேன், இந்தத் தாழ்ந்தவனே?

வலைப்படு மானென முற்படு மாசையின் வாயிறபட்டே
அலைப்படுவேன், உனக் காட்படுவே னல்லன், அற்பருக்கே
விலைப்படுவேன், நல மேற்பட நான் என்ன வேலைசெய்யத்
தலைப்படுவேன்? உன் னருட்டுணை யின்றித் தயங்கினனே.

அருக்க னுதித்திட்ட நாட்களெல்லாம் பசி யாற்றுகின்ற
ஒருக்கமதிற் பொழுதே கட்டிவிட்டேன்: அருமைக் கல்வியைத் தேல
தருக்க மியற்றிச் செருக்கடைந்தேன்: நின்செந் தாமரைத்தாள்
உருக்கமெழுத் தொழு தேத்திலன்: எங்ஙனம் உய்குவனே?

நாபத்து வாய்த்தெனக் கூவவல்லால், உள்நலம் பெருகிக்
கோபத்தைக் காக்குந் திறமிலேன்: ஞானங்கொள் ளறிவாம்
தீபத்தை யென்னிற் றெரிய வைப்பாய், நன்மைசேர வைப்பாய்,
ஆபத்திற் காத்தருள் செய்தவனே, என்னை யாண்டவனே

அன்பே யெல மென் றறிந்தும், என்னன்பில் அழுக்கடைதல்
என்போலியர் தம் எளிமையன்றோ? இதுவே புதுமை!
தன்போற் பிறவுயி ராமென எண்ணத் தடையெதுவோ,
நின் பேரருளில் உயிர்களெல்லாம நின்ற நேரறிந்தே?

பேராசை யென்றொரு பித்துப்பிடிக்கப், பிறர்க்குரிய
ஓரா தெனக்கென்று நானிருந்தேன்: அதை யோட்டிவிட்டுன்
றாரா வமுத அருள்நினைத்தாங்கென் னசட்டையெல்லாம்
நீரா யுருகுந்தென் கண்ணீரா யரும்ப நிகழ்த்துகவே.

முள்ளினுங் கூரிய என் மனச்சாட்சி முழுமுனைதான்
கொள்ளினுங், குற்றந் திருந்தறியாத கொடுமைவளர்
உள்ளிடம், ஆணவப் பேயாடுகின்ற, துதைத்துதைத்துத்
தள்ளினும் போவதிலை; என் செய்வேன் நின் றயவின்றியே?

செல்லா தென் மந்திரம்: பொல்லாவப் பேயை என் சித்தவலி
வெல்லா; ததையினி எப்படியாயினும் வென்றுவிட்டா
லல்லா,தென் பாழ்மனம் நின்சேவை தன்னில் அமர்ந்தொருநாள்
நில்லா, தென் மெய்யின்ப மில்லாதுபோம், அந்நிலையின்றியே. 190

(அருள் வேண்டுதல்)

கண்டா ரிரங்குவர் என்ற பொய்யெண்ணங் கருத்தெழும்ப,
அண்டாத பேரை யடுத்துநின்றேன்: அவரால் நலமொன்
றுண்டாவதில்லை, புன் பொன்னுள மின்றி: இவ்வுண்மை கற்றுக்
கொண்டாலும், பட்டுக் குழைந்தாலும், உள்ளங் குறித்திலதே.

சின்னஞ்சிறிய பருவத்திலே, இடர் சேர்ந்த வெல்லாம்,
பொன்னந் திருவருளாலே துரத்திப் புரந்தனையே:
முன்னந் தழைத்த வருள், என்னைத் துன்பம் முடுக்கில், இனித்
தன்னந்தனித்து விடுமோ, நின்பால் வந்து தாங்கியுமே?

ஞாயம் பல சொல்ல நானறியேன்: உன்னை நாடிவந்தேன்:
காயம்பெறச் செய்வித்தாய்: என்னைக் காக்குங் கடனுன்னதே:
சேயின் குணங் கொடிதேனும், பெற்றோர் அன்பு செய்கிலரோ,
தாயும் பெருந் தந்தையாயுந் திகழ்கின்ற தற்பரனே?

நீயே யெனக்குத் தனித்துணை யென்று நினைத்திருக்கத்
தாயே பிறர்துணை தான்விட்டதே: நின் றயவெழுந்து,
சேயே இவனெனச் சேர்த்துக் கொள்ளாது தெருவில்விட்டால்,
நாயேன் கொடுவிதி யார்க்கென்று சென்று நவிலுவனே?

தாயே என்நாத் தவிக்கின்றது, பால் எற்குத் தந்திரட்சிப்
பாயே யெனப் பரவுஞ் சேய்க்குப் பாலைப்பதுக்கி யெட்டிக்
காயே தரத் துணிவாளோ பெற்றாள்? என் கடமைசெய்து
நாயேன் பரவின் நலமன்றித் தெய்வமும் நல்குவதே?

விண்ணீர் பொழியும் பெருமிதம் போல, நின் மெய்யருளாந்
தெண்ணீர் பொழிகின்ற செங்கொண்டலே, வளர் சீவர்களுக்
குண்ணீர் கொடுத்துப் பசிக்கூட்டும் உத்தமனே, உடையுங்
கண்ணீர் துடைத் தெனைக்காப்பாற்றுந் தெய்வக் கடனுனதே.

மதிகாண் வழிச்செல வேலாச் சிறுவர் மயங்கிடுங்கால்,
கதிகாண் பெரியர், அவர்செல்ல நன்மதிக் கண்கொடுப்பார்:
அது காண்புடையர்க் கழகாதல்போல், அடியேனைப் பெற்ற
பதிகாண், உனக் கெனக் குய்வழி காண்பித்தல் பாங்குடைத்தே.

பிள்ளைக் குருவிக்குத் தாயிரை யூட்டிய பெற்றியைப்போல்,
வெள்ளைக் கருத்தினெனக் களித்தாய் சற்றுவித்தை: இனிக்
கள்ளக் கசடற நல் மருந்தாக்கிக், கதிபெறுமா
றுள்ளத் தமரப் புகட்டவு முண்டெனக் கோர்கடனே.

இடும்பையும், உள்ளத் தெழுச்சியும் எங்களியற்கை யென்றே,
தொடும்பணி முன்னிட்டுச் சோராது செய்யின், நின் றாயவருள்
நெடும்பயன் மேவிட லாமென்று நம்பிய நெஞ்சனைக், கை
விடும்படி நின் மனந்தான் வருமோ, அருள் வித்தகனே?

இப்பாரில் நான்படுந் துன்பமெல்லாம் முன் இடற்றுவினை
தப்பாது தந்த பயனாயின், அவ்வினை தந்தகீருத்
தொப்பா ரிலாதநின் பொன்னடி நீழலில் ஒப்புவித்து
வைப்பேன்; அதனைத் திருத்திடல் வேண்டும், வரபதியே. 200

முட்டாது கூறையும், சோறுந் தந்தாய்; நன் முயற்சியெல்லாம்
தட்டாது தம்பயனீயத் தந்தாய்; இடர்தான் விழுங்க
வொட்டா திரட்சையுந் தந்தாய்; உயர்பதம் ஓர்அறிவுக்
கெட்டாது வைத்தல், எது நினைந்தோ, எம்மிறையவனே?

வந்தனம் ஈந்த இவ்வாழ்க்கைக்கு; வாழ்க்கையில்வாய்த்தவைக்கு
வந்தனம்; நின் படைப்புக்காணவைத்த நின் வள்ளன்மைக்கு
வந்தனம்; நின்னை வணங்க நல்வேளை வகுத்ததற்கு
வந்தனம்; நின் அருளாட்சிக்கு வந்தனம், வந்தனமே.

தேனீ புதுமலர் தோறுந் திரிந்துண்டு தேறுதல்போல்,
நானுய்ந் துனது செயல்கண்டு தேறுநலம் பருகித்
தானே தெளிந்து, தரணி யுள்ளார்க்குத் தகவுரைக்க,
வானோ டில குடையானே, கனிந்து வழிசெய்கவே. 203

இந்நூலின்கணுள்ள திசைச்சொற்கள்.

கரல்—இருதயம், நெஞ்சாங்குலை
பாஸ்கரம்—‘Phosphorus’ என்னும் ஜடப்பொருள்
ஆயம்—வலி, ஆற்றல்
அட்ட—கெட்டுப்போன
கொட்டாரம்—அரண்மனை
கணி—காட்சி
ஓர்க்கின்ற—நினைக்கின்ற
ஒருக்கம்—ஆயத்தஞ்செய்தல்

பிழைதிருத்தம்.

பிழை.	திருத்தம்.	பக்கம்.	வரி.
புட்டெனவே	பொட்டெனவே	12	2
வேர்கோளுமே	வேர்கொளுமே	15	20
அழைக்கினுமேம்	அழைக்கினுமே	16	19